**அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அடுத்த வருடத்திற்கான ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக மேற் கொள்ளப்பட்டிருந்த ரூபா 76,245 தொகைக்கான செலவு மீளாய்வாண்டின் செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 26,205,751 தொகைக்கான மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 4,579,027 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தொடர்பாக துணைப் பதிவேடுகள் சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவேடுகள் நாளது வரை ஆக்குவதில் காணப்பட்ட பலவீனம் காரணமாக ஏற்பட்டுள்ளதெனவும், அப் பலவீனங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 118,959,055 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதிவேடுகள் சரியாக நாளதுவரை ஆக்குவதற்கு மற்றும் அட்டவணைகள் சரியாக தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) கோவையின் விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் நாளாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | விதியின் பிரகாரம் எதிர்காலத்தில் ஆவணங்கள் உரிய முறையில் பரிசோதனை செய்து சுருக்கக் கையொப்பம் இடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், தற்போது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் ஆவணங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச் குடியசரின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி. 134(3) | மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான ஒரு அறிக்கை கணக்காய்விற்கு அனுப்பப்பட்டதுடன் 2020 ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நி.பி. 395(இ) | சபையினால் பேணப்பட்டு வரும் 04 வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2019 திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்று தயாரித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) நி.பி. 571 | இரண்டு வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 2,055,904 பெறுமதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) நி.பி. 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பம் இடப்படும் உடன்படிக்கை களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கைகளின் பிரதிகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/ பபாகொ/2010/01 இலங்கங் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 06 | சபைக்கு சொந்தமான 14 கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்திருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்து தரும் படி விண்ணப்பித்துள்ளதுடன், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,918,275 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,046,597 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் நடைமுறைக் கணக்கு ஒன்று தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் காசேட்டின் மீதி ரூபா 1,876,216 தொகையாக காணப்பட்டதுடன், ஐந்தொகையில் ரூபா 1,888,216 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 12,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியாக நிதிக் கட்டுப்பாடு மேற் கொள்ளப்பட வேண்டும். | இவ்வித்தியாசம் 2014 ஆண்டின் செப்தெம்பர் மாத ஆரம்ப மீதியை முன்கொண்டு வந்த போது ஏற்பட்டிருந்த வழு ஒன்றாக காணப்பட்ட துடன் அவ் வித்தியாசம் மீளாய்வாண்டு வரை காணப்பட்டதுடன் 2020 வருடத்தின் கணக்குகள் தயாரிக்கும் போது அதனை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 715,000 | 688,730 | 688,730 | 154,256 | 485,000 | 614,030 | 583,960 | 168,266 |
| வாடகை | 14,094,474 | 12,277,855 | 11,363,236 | 1,373,182 | 12,488,800 | 12,082,712 | 11,915,273 | 715,195 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,427,300 | 1,833,565 | 1,820,061 | 56,404 | 1,075,300 | 1,282,652 | 1,280,652 | 45,000 |
| ஏனைய வரு மானங்கள் | 6,812,544 | 11,696,267 | 3,808,065 | 13,673,080 | 4,829,800 | 5,149,232 | 1,611,043 | 6,634,930 |
| மொத்தம் | 23,049,318 | 26,496,418 | 17,680,092 | 15,256,922 | 18,878,900 | 19,128,626 | 15,390,932 | 7,563,391 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களின் தகவல்கள் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களுக்காக அந் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 21 வர்த்தக அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரி ரூபா 152,370 தொகையினை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவைத் தொகை 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு காலப்பகுதிக்கான தொகை எனவும், அந்த இடங்கள் தற்போது காணப் படாததால், பணம் அறவீடு செய்வதற்கு ஆட்களை தேடிக் கொள்ள முடியாமல் இருப்பதுடன் குறிப்பிட்ட தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,631,271 தொகை மற்றும் ரூபா 11,884,148 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக அறவிடப்பட நடவடிக்கை வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 3,900,000 கிடைத்திருந்ததுடன், மீதி நிலுவைத் தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்தை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 28 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | துணை விதிகளை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 29 துணை விதிகளை தழுவியுள்ளேன் என அறிவிக்கின்றேன். |

### (ஆ) செயற்படுத்தப்படாத செய்பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் ரூபா 830,000 நிதி ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்த 11 அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தி இருக்கவில்லை. | பாதீட்டில் உட்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஆண்டின் போது செயற்படுத்த வேண்டும். | பாதீட்டில் உட்படுத்தியிருந்த அனைத்து நிர்மாணவேலை களையும் செயற்படுத்துவதற்காக வருமானம் கிடைத்திருக்காமை யால் அந் நிர்மாண வேலை களை செயற்படுத்துவதற்காக முடியாமல் போனதுடன், எதிர்காலத்தில் சபையின் வருமானம் மற்றும் செலவுகளை கவனத்தில் எடுத்து செயற்படுத்தக் கூடிய அபிவிருத்தி திட்டங்களை மாத்திரம் அப் பதிவேட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களின் முன்னேற்றத்தை சமர்பித்து இருந்ததுடன், அடுத்த நான்கு ஆண்டு திட்டத்தில் அந் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பான அலுவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காத 58 நிறுவனங்கள் காணப்பட்டதுடன் அதன் படி அதிகாரப் பிரதேசத்தில் செயற்படும் பல்வேறு நிறுவனங்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு காரணங்களினால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனைத்து வர்த்தகங்களுக்கும் மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முடியாமல் போனதுடன், அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காத வர்த்தகங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### 3.3.1 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக் கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்பு வதற்கும் 10 மிகைகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் மிகைகளை முறைப்படுத்து வதற்கு மற்றும் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியணி வெற்றிடங்களில் ஒரு வெற்றிடம் மாத்திரம் நிரப்பப் பட்டுள்ளதுடன், மீதியான வெற்றிடங்களை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 ஆந் திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மற்றும் மனித வளத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மனித வளத் திட்டம் தயாரிப்பது தொடர்பாக அறிந்திருக்காததுடன், 2020 ஆண்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கையொப்ப மிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 03 ஏக்கர்களை கொண்ட 02 காணி தனியார் தரப்பினரினால் அங்கீகாரம் இன்றி அனுப்பவிக்கப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். | காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

#### 3.4.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 7,826,130 தொகைக்கான 20 காணிகள், பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் அனுபவித்து வரும் 25 காணிகள், ரூபா 1,935,000 தொகை பெறுமதியான 12 கட்டிடங்கள் மற்றும் ரூபா 9,309,900 பெறுமதியான 03 வாகனங்களை சட்ட ரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவது தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து உரித்தாக்குவதற்கும், ஒரு வாகனம் லீஸிங் முறையில் பெற்றிருந்ததுடன், மேலும் ஒரு வாகனம் உடன்படிக்கை ஒன்றின் கீழ் பெறப்பட்டிருந்ததுடன், மீதியான வாகனத்தை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |

#### 3.4.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 17 காணிகளை ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான அநேகமாக காணிகள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் மயானங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் சில காணிகளில் விவசாயம் செய்யப் படுவதுடன் பிலிசரு நிலம் 05 ஏக்கர்களில் தற்போது விவசாயம் செய்யப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

**3.5 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக முறையான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும் அதனை சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டும் என அறிந்திருக்கவில்லை எனவும் 2020 ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |